
1 டன் கரும்புக்கு 6,000 ரூபாய் ... இனிப்பான வருமானம் தரும், இயற்கைச் சர்க்கரை!



‘ஒரு டன் கரும்புக்கு 2 ஆயிரம் ரூபாய் வேண்டும்’ என்பது விவசாயிகளின் நீண்டகாலக் கோரிக்கை. ஆனால், ‘எங்களுக்குக் கட்டுப்படியாகாது’ என்று சொல்லி வந்த ஆலைகள், தற்போது கரும்பு உற்பத்தி குறைந்துவிட்டதால், அதற்கு மேலேகூட தரத்தயார் என்று இறங்கி உள்ளன. ‘எங்களிடம் ஒரு டன் கரும்புக்கு 2,400 ரூபாய்’ என்று சில ஆலைகள் விளம்பரமே செய்கின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!இந்நிலையில், ‘நீங்கள் என்ன 2,000 ரூபாய் தருவது.. ஒரு டன் கரும்பில் 6,000 ரூபாயை நானே எடுத்து விடுவேன்’ என்றபடி கலக்கிக் கொண்டிருக்கிறார் தஞ்சாவூர் மாவட்டம், செம்பிய நல்லூர், திருநாவுக்கரசு.

தமிழக உழவர் இயக்கத்தின் துணைத் தலைவர், தாளாண்மை உழவர் இயக்கத்தின் தலைவர் என்றெல்லாம் பதவிகளை வகித்துவரும் இவர், முழுக்க இயற்கை விவசாயத்தில் ஆர்வம் காட்டி வரும் முன்னோடி விவசாயி. குறைந்த செலவிலேயே கூடுதல் லாபம் காண்பதற்கு, இதுவும்கூட அவருக்கு உதவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இனி அவரே பேசுகிறார்.

“எலக்ட்ரிக்கல் இன்ஜினீயரிங் படிச்ச நான்.. சிங்கப்பூர், சவுதி அரேபியானு வேலைக்குப் போயிட்டேன். ஆனால், அந்த வேலையில் பெரிதாக மனநிறைவு இல்லை. ஆறு வருடம் கழித்து திரும்பி வந்து, சொந்தமா உபரி மின்நிலையம் அமைக்கும் வேலையை ஆரம்பித்தேன். இதுக்கான முதலீடு ரொம்ப பெரிது, இதிலும் அந்த அளவுக்கு வருமானம், மன நிறைவு இதெல்லாம் கிடைக்குமானு தெரியாது. அந்த வேலைகள் ஒரு பக்கம் நடந்துகிட்டிருக்கும் போதே.. ‘மன நிறைவான வருமானத்திற்கு வழி, விவசாயம்தான்’னு தோணுச்சு. அதில் இறங்க தீர்மானித்தேன்.

எங்கப்பா முழுநேர விவசாயி. ஆனால், எனக்கு அதைப்பற்றி துளி கூட தெரியாது. அவர், கடன் வாங்கி விவசாயத்தைப் பண்ணிக்கிட்டிருந்தார். அந்தக் கடனை அடைக்கறதுக்குக் கூட அதில் வருமானம் வந்தபாடில்லை. அப்படியிருக்க, நாம எப்படி லாபகரமா விவசாயம் பண்றதுனு யோசிச்சேன். அப்பத்தான் இயற்கை விவசாயம் பற்றிய தகவல்கள் எனக்குக் கிடைத்தது. 2001 ம் வருடம் எங்க ஊரிலேயே 50 ஏக்கர் நிலத்தை வாங்கினேன். நெல், மீன், மாடுனு ஒருங்கிணைந்தப் பண்ணை முறையில் விவசாயத்தை ஆரம்பித்தேன்.

ஒரு கட்டத்தில் நெல் சாகுபடியைக் குறைத்துக் கொண்டு, 22 ஏக்கரில் கரும்பு போட்டேன். முதல் வருடம் ஏக்கருக்கு 60 டன் கிடைத்தது. அடுத்தடுத்த வருடத்தில் 40 டன் வரைக்கும் கிடைத்தது. இரண்டு வருடத்திற்க்கு முன்பு கடும் மழையால் பாதி கரும்பு காலியாயிடுச்சு. அதனால் 5 ஏக்கரோட கரும்பு போடறதை நிறுத்திக்கிட்டு, மீதியிடத்தில் குமிழ், தேக்கு, மலைவேம்புனு மரங்களை நட்டுட்டேன். ஆரம்பத்தில் ஆலைக்குத்தான் கரும்பை அனுப்பிக்கிட்டிருந்தேன். அங்க இயற்கை, செயற்கைனு பிரிச்சுப் பார்க்கறது எல்லாம் கிடையாது. எல்லா கரும்புக்கும் ஒரே விலைதான். ‘இயற்கை விளைபொருளுங்களுக்கு வெளியில் கூடுதல் விலை கிடைக்கிறது. அதனால் நானே நாட்டுச் சர்க்கரை தயாரித்தால் என்னனு ஒரு யோசனை வந்தது. இந்த தடவை அதுக்கான வேலைகளில் இறங்கிட்டேன். நான் எல்லாம் தாம்பு கரும்பு வெட்டினப் பொழுது, ஏக்கருக்கு 20 டன் அளவில் தான் கரும்பு கிடைத்தது. அதனால் 5 ஏக்கரில் கிடைத்த 100 டன் கரும்பையும் ஆட்டி சர்க்கரை தயாரித்தேன்” என்று ஆச்சரியத் தகவல் சொன்னார் திருநாவுக்கரசு.

“உழவு, பார், நடவு எல்லாமே ரசாயன முறைக்கும், இயற்கை முறைக்கும் ஒண்ணுதான். ரசாயன உரங்களுக்குப் பதிலா தொழுவுரம், நுண்ணுயிர் உரங்கள், பஞ்சகவ்யா, மீன் அமிலம், இ.எம். அமுதக்கரைசல், முட்டைக்கரைசல்.. இதை எல்லர் பயன்படுத்தினேன். மாடுகளெல்லாம் என்கிட்டயே இருக்கிறதால இடுபொருள் தயாரிக்கிறதுக்கு பெரிதாக செலவும் இல்லை. அதனால் கரும்புக்கான உற்பத்தி செலவு குறைஞ்சிடுச்சு. 12 மாத வயதுள்ள கரும்புகளை வெட்டி, சாறு பிழியறுதுக்காக நல்லாவே கைகொடுக்குது. கரும்புச் சாறை காய்ச்சுறதுக்கான எரிபொருளா, அதோட சக்கையையே பயன்படுத்திக்கிறேன். இது மூலமாகவும் நல்ல மிச்சம்.

கிரஷர் மெஷினில் ஒரு மணி நேரத்தில் ஒரு டன் கரும்பை அரைக்க முடியும். ஒரு நாளைக்கு ஆறு டன் கரும்பை அரைத்து சாறு எடுத்து வெல்லம் காய்ச்சிட முடியும். கரும்புச்சாறை கொப்பரையில ஊத்தி.. சுண்ணாம்பு, பேக்கிங் சோடா இரண்டையும் போட்டுக் காய்ச்சணும். மேலாக வரும் கழிவுகளை நீக்கிவிட்டு, பாகு பதம் வந்ததும் தொட்டியில் ஊற்றி தேய்த்து விட்டால் நாட்டு சர்க்கரை கிடைச்சுடும். தேவைப்பட்டால், அப்படியே அச்சில் ஊற்றி மண்டை வெல்லம், அச்சு

வெல்லம் எது வேணுமோ அதைத் தயாரிக்கலாம். நான் நாட்டுச் சர்க்கரைதான் தயாரிக்கிறேன். கிரஷர், கொப்பறை, அடுப்பு, ஷெட்டுனு மொத்தம் ஒரு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் ரூபாய் செலவு பண்ணியிருக்கேன். கிட்டத்தட்ட 15 வருடத்திற்கு இதில் வேற செலவு எதுவும் இருக்காது" என்று தொழில்நுட்பத் தகவல்களைப் பகிர்ந்தார்.

தொடர்ந்தவர்," ஒரு டன் கரும்பில் 110 கிலோ வரைக்கும் நாட்டுச் சர்க்கரை கிடைக்கும். பாலிதீன் பையில் காற்று புகாமல் கட்டி வைத்தால், ஒரு வருடம் வரைக்கும் கூட வைத்து உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இப்போதைக்கு இயற்கை முறையில் விளைந்த கரும்பில் தயாரிக்கபட்டற ஒரு கிலோ நாட்டுச் சர்க்கரைக்கு அதிகபட்சமா அறுபது ரூபாய் வரை விலை கிடைக்கிறது. சாதாரண முறையில் விளைந்த கரும்பில் தயாராகிற நாட்டுச் சர்க்கரை 30 ரூபாய் கிக்கிறது.

இயற்கை நாட்டுச் சர்க்கரை சராசரியாக கிலோ 60 ரூபாய்னு கணக்குப் போட்டா.. 1 டன் கரும்பிலிருந்து அதிகபட்சமா 6,000 ரூபாய் வரை சம்பாதிக்க முடியும். சாகுபடிச் செலவுனு பார்த்தால் இது நான்காவது தாம்புக் கரும்புங்கிறதால் விதைக்கரணை, பார், இந்த மாதிரியான செலவு இல்லை. அதனால், ஒரு டன் வெறும் 250 ரூபாய் அடக்கத்தில் எனக்கு கிடைத்தது. மற்றபடி... வெட்டுக் கூலி, காய்ச்சுற செலவு, போக்குவரத்துச் செலவு இருக்கு. மொத்தமா 1,500 ரூபாய் வந்திடும். செலவு, போக 1 டன் கரும்புக்கு சராசரியா 4,500 ரூபாய் கையில் நிற்கும். நாட்டுச் சர்க்கரையோட விலை கிலோ 30 ரூபாய்னு குறைவா வைத்துக்கிட்டாலும், 1,500 ரூபாய் கண்டிப்பா கையில் நிற்கும்.

இதுவே ஒரு டன் கரும்பை ஆலைக்கு கொடுத்தால் 2,000 ரூபாய்தான் கிடைக்கும். நடவு, பராமரிப்பு, வெட்டுக் கூலினு எல்லாம் போக சராசரியாக 500, 600 ரூபாய்தான் கையில் நிற்கும்.

பாடுபட்டு விளைவிக்கிறதோட நிற்காமல், முயற்சி பண்ணி நாமளே மதிப்புக்கூட்டினால் நிச்சயம் லாபம்தான். ஆனால், அதுக்கு முழுநேர விவசாயியா நாம மாறணும்கறது ரொம்ப முக்கியம்.அதைவிட்டுட்டு. ஆற்றில் ஒரு கால்.. சேற்றில் ஒரு கால்னு வைத்தால் எதிர்ப்பார்க்கறி லாபம் வராது. வர்ற லாபத்தைத்தான் எதிர்பார்க்க முடியும்" என நச்சென்று சொன்னார். நியாயம்தானே!

**தொடர்புக்கு**

திருநாவுக்கரசு, அலைபேசி : 93802-97522